மலேசிய நண்பன்

21 ஆகஸ்ட் 2018



மெட்ரிக்ஸ் நிறுவனத்தின் ஆண்டுக்கூட்டத்தில் சக இயக்குநர்களுடன் டத்தோ முகமட் ஹஸ்லான்

# வீட்டு சொத்துடைமையில் வெ.1.6 பில்லியன் ஈட்ட மெட்ரிக்ஸ் திட்டம்

(துர்க்கா)

சிரம்பான், ஆக. 21-

தனது நகரத்திட்டங்களுக்கான வலிமையை மேலும் வலுப்படுத்தவும் வீடு வாங்குபவர்களிடமிருந்து நல்லதொரு கிராக்கியை கொண்டிருக்கவும் மெட்ரிக்ஸ் கொன்சப் ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் நிறுவனம் 2019 ஆம் ஆண்டில் தொடங்கவிருக்கும் வீட்டுடைமைத்திட்டத்தில் 1.6 பில்லியன் வெள்ளியை ஈட்டுவதற்குதிட்டம்கொண்டுள்ளது.

நிறுவனத்தின்குழுமத்தலைவர் டத்தோ முகமட் ஹஸ்லா முகமட் அமின் கூறுகையில், நிறுவனம் தொடங்கவிருக்கும் புதியத் திட்டத்தின் பெரும்பகுதி நகர மேம்பாட்டை கொண்டிருக்கும். நெகிரி செம்பிலானில் பண்டார் ஸ்ரீ செண்டாயான், ஜொகூரில் ஸ்ரீ இம்பியானில் இத்திட்டங்கள் அமைந்து இருக்கும் என்றார்.

இவ்வாண்டின் இரண்டாவது அரையாண்டில் 'சேம்பர்ஸ்' என்று அழைக்கப்படும் கோலாலம்பூரில் முதலாவது அடுக்குமாடி வீடுகளான அப்பார்ட்மெண்ட் குடியிருப்புத்

விகிதத்தை கூட்டும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாக அவர் சொன்னார்.

சொத்துடைமை துறை நிச்சயமற்றதாக விளங்கிய போதிலும் தியாரா செண்டாயான் வீடமைப்புத் திட்டத்தில் 404 தனி மற்றும் இரட்டை அடுக்குமாடி வீடுகள் ஒருநாளில் விற்பனையாகி விட்டதாக அவர் குறிப்பிட்டார். இரண்டாவது திட்டத்தில் பிரமித்துப் போகும் அளவிற்கு 80 விழுக்காடு வீடுகள் விற்பனையாகிவிட்டதாக குறிப்பிட்ட முகமட் ஹஸ்லான், தியாரா செண்டாயான் திட்டத்தில் 2,000 ஆயிரம் வீடுகள் கட்டப்படவிருப்பதாகவும் குறிப்பிட்டார். பண்டார் ஸ்ரீ செண்டாயா பகுதியில் அதிவிரைவு ரயில் திட்டத்தை ஒத்திவைக்க அரசாங்கம் எடுத்துள்ள முடிவு, இத்திட்டத்தின் வீடுகள் விற்பனையை பாதித்துள்ளதா? என்று கேட்ட போது, பாதிப்பு குறைந்த அளவில்தான் என்றார். அதே வேளையில் அந்த திட்டத்தை அரசாங்கம் ரத்து செய்தாலும் இது எங்களை அதிகளவில் பாதிக்காது. அப்போதும் கூட எங்களால் நல்ல